DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C.258/2024** |
| Deposition of Witness for | : | **P.W. 1** |
| Name | : | **மலையரசன்** |
| Father's Name | : | **ராஜாங்கம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 2 வது எதிரி ஆஜர். 1ம் எதிரி சிறையில் உள்ளார்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருப்புவனம் தாலுகா கலியாந்தூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு மதுபானக்கடை எண். 7615 பூவந்தியில் விற்பனையாளராக வேலை பார்த்து வருகிறேன். வழக்கு சம்பவகாலத்தின் போது கலியாந்தூரில் உள்ள டாஸ்மாக் கடை எண்.7674 என்ற கடையில் விற்பனையாளராக வேலை பார்த்து வந்தார். வழக்கின் ஆஜர் எதிரி மற்றும் - ஆஜராகாத மற்றொரு எதிரியையும் எனக்கு தெரியும். சாட்சிகள் முத்துக்குமார், குமார் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களை எனக்கு தெரியும் வழக்கு சம்பவகாலத்தில் என்னுடன் வேலை பார்த்து வந்த ஊழியர்கள்.

2. கடந்த 06.08.2018 அன்று கலியாந்தூரில் உள்ள டாஸ்மாக் கடையில் விற்பனையாளராக வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது மாலை 4.15

மணியளவில் ஒரு அப்பாச்சி TN 59 AB 4632 என்ற இருசக்கரவாகனத்தில் எதிரிகள் இருவரும் எனது கடைக்கு வந்தார்கள். எதிரி மணிகண்டன் என்னிடம் ரூ.150/- கொடுத்து கம்மியான ரேட்டில் சரக்கு கேட்டார். நான் அவரிடம் அவர் கேட்ட 180 ML அளவுள்ள மது பாட்டிலை கொடுத்து மீதம் ரூ.40/-ஐ அவரிடம் கொடுத்தேன். ஆனால் அவர் எதிரி மணிகண்டன் என்னிடம் தான் ரூ.200/- கொடுத்ததாகவும் மீதி ரூ.20/- என்னிடம் கேட்டார். நான் எதிரியிடம் மதுபாட்டில் விலை போக மீதம் 40/- ருபாய் தான் உள்ளது என்று தெரிவித்தார். அதில் எனக்கும் எதிரி மணிகண்டனுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பின்பு எதி ரிகள் இருவரும் இருசக்கரவாகனத்தில் சென்றுவிட்டார்கள். அன்றைய தினம் அரை மணி நேரம் கழித்து அதே மதுபானக்கடையில் வேலைபார்த்து கொண்டிருந்தபோது எதிரி மணிகண்டன் வீச்சருவாளை கொண்டுவந்து எனது கழுத்தை நோக்கி வெட்டினார்.

3. நான் எனது இடது கையால் அந்த வெட்டை தடுத்தபோது அது எனது மணிக்கட்டுக்கு கீழே பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது. ***(சாட்சி தனது இடது கையில் மேற்படி காயத்தினால் ஏற்பட்ட நீளமான தழும்பினை நீதிமன்றத்தில் காண்பிக்கிறார். மேலும் சாட்சி தனது இடது கை மோதிரவிரலும், சுண்டுவிரலும் நரம்பு துண்டிக்கப்பட்டதால் செயலிழந்துவிட்டதாக கூறுகிறார். சாட்சி நீதிமன்றத்தில் அவரது இடது கையில் மடங்கிய நிலையில் உள்ள மோதிரவிரலையும். சுண்டுவிரலையும் காண்பிக்கிறார் , ஆகையால் அது அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது).*** அதன்பிறகு எனது கடையில் வேலை பார்த்த சாட்சிகள் குமார் , முத்துக்குமார் ஆகியோர்கள் மேலும் எதிரி மணிகண்டன் என்னை வெட்டாதவாறு தடுத்தார்கள். அவர்களையும் எதிரி மணிகண்டன் வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார். அதன்பிறகு மதுபாட்டில் வாங்கவந்த நபர்களையும் எதிரிகள் இருவரும் அருவாளை காட்டிமிரட்டினார்கள். அதில் சரக்கு வாங்க வந்த ஆறுமுகம் என்பவருடைய பல்சர் இருசக்கரவாகனத்தையும் எதிரிகள் எடுத்துக்கொண்டு இருவண்டியில் தனித்தனியாக சென்றுவிட்டனர்.

4. என்னுடன் வேலை பார்த்த குமார், முத்துக்குமார் ஆகியோர்கள் என்னை போக்கு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள். திருப்புவனம் அரசு மருத்துவமனையில் எனக்கு ஆழமான காயங்கள் இருந்ததால் முதலுதவி சிகிச்சை மட்டும் செய்து மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.ஆனால் நான் மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லாமல் மதுரை மீனாட்சி மிசன் தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். நான் மதுரை மீனாட்சி மிசன் தனியார் மருத்துவமனையில் சுமார் 20 நாட்களாக உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். நான் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது திருப்புவனம் போலிசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள். பின்பு மதுரை மீனாட்சி மிசன் தனியார் மருத்துவமனையில் நான் இருந்த நடந்த விபரங்களை என்னிடம் கேட்டு புகார் மனு எழுதினார்கள்.

5. நான் படித்துப்பார்த்த பின்பு புகார் மனுவில் கையொப்பம் செய்தேன். புகார்மனுவில் உள்ள மலையரசன் என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார்மனு அ.த.சா.ஆ.1** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் வீச்சருவாள் எதிரி மணிகண்டன் என்னை வெட்டப்பயன்படுத்தியது ஆகும். அந்த **வீச்சருவாள் அ.த.பொ.சா.1** ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் வாள் சம்பவத்தில் எதிரி அருண் சம்பவத்தில் பயன்படுத்தியதாகும் அந்த **வாள் அ.த.பொ.சா.2** ஆகும். இச்சம்பவம் என்னுடன் வேலை பார்த்த நபர்களுக்கு தெரியும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. பொதுவாக கடையில் விரும்பத்தாக அசம்பாவிதம் ஏதாவது நடந்தால் மாவட்ட டாஸ்மாக் மேலாளருக்கோ காவல்துறைக்கோ தகவல் சொல்ல சொல்லி மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது என்றால் சரிதான். சம்பவத்தன்று 4.15 மணியளவில் சில்லறை கொடுக்கும் விசயத்தில் ஏற்பட்ட தகராறு சம்மந்தமாக

ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் புகார் கொடுக்கும் அளவிற்கு வாக்குவாதம் நடைபெறவில்லை. எதிரிக்கும் எனக்கும் எந்தவித முன் விரோதம் கிடையாது என்றால் சரிதான். எனக்கு காயம்பட்டு எவ்வளவு நேரத்தில் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மாலை சுமார் 5.00 மணிக்கு சென்றேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது நான் தெளிவாக இருந்தேனா என்றால் ஆமாம். என்னை சார்பு ஆய்வாளர் எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் மாலை சுமார் 5.15 மணிக்கு விசாரித்தார். நான் திருப்புவனம் ஏரியாவில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான்.

2. திருப்புவனம் ஏரியாவில் வீச்சருவாள் என்றால் அ.த.பொ.சா.1 வீச்சருவாளை விட மெலிதாக இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.த.பொ.சா. 1 வீச்சருவாள் கிடையாது என்றும் இது சாதாரண அருவாள் என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயர் போலிசார் சொல்லித்தான் தெரியும் என்றால் நான் விசாரித்து தெரிந்து கொண்டேன், மருத்துவமனையில் இருக்கும்போது பிறர் சொல்லி தெரிந்து கொண்டேன். அ.த.சா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். எதிரிகள் பெயர், விபரம் எனக்கு அப்போது தெரியாததால் நான் சொல்லவில்லை. ஆறுமுகம் என்பவரின் பெயர் தெரியாது பெயர் கேள்விப்பட்டுத்தான் தெரிந்து கொண்டேன். அ.த.பொ.சா.1 அருவாள் என்பது எனக்கு நன்கு தெரியும். மருத்துவமனையில் நான் அருவாளால் வெட்டப்பட்டுதான் காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவரிடம் அடையாளம் தெரியாத நபர் வெட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு மருத்துவ நமூனாவுடன் சேரவில்லை என்றால் சரிதான்.

3. எனக்கு இடது கை பழக்கம் உண்டா என்றால் இல்லை. எங்கள் டாஸ்மாக் கடையில் கூட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் ஆட்கள் நிறைய இருந்தார்கள் என்றால் இல்லை. கடையில் வியாபாரம் செய்யும் போது ரோட்டில் என்ன வாகனம்

வருகின்றது என்று பார்க்க முடியாது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் 1வது எதிரி என் மீது நான் கூறுவது போல் எந்த தாக்குதலும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. விபத்தினாலோ அல்லது வேறு அசம்பாவிதத்தினாலோ எனக்கு ஏற்பட்ட காயங்களை 1வது எதிரிதான் ஏற்படுத்தினார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. மதுபான கடைக்கு அருகில் பார் உள்ளதா என்றால் இல்லை. எங்களது கடைக்கு ஒரு கதவு (சட்டர்) தான் உள்ளது என்றால் சரிதான். நான் கடை ஊழியர் என்பதற்கு ஆதாரம் நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எங்களது கடைக்கும் கலியாந்தூர் - திருப்புவனம் ரோட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் அரை கி.மீ தூரம் இருக்கும். என்னுடன் வேலை பார்த்த குமார், முத்துக்குமார் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் குமார் விற்பனையாளர், முத்துக்குமார் மேற்பார்வையாளராக வேலை பார்த்து வருகிறார்கள். அந்த கடையானது ஒரே ஒரு அறை கொண்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எத்தனை நபர்கள் கடைக்கு வந்து பொருள் வாங்கினார்கள் என்றால் எங்கள் மூவரை 258/2024 தவிர யாரும் கிடையாது. ஆஜர் 2 வது எதிரியை சம்பவத்திற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த 2 நபர்களில் 2 வது நபர் தலைக்கவசம் அணிந்து வந்தாரா என்றால் இல்லை. 2 வது எதிரி அருண் என்னை அசிங்கமாக பேசவோ காயப்படுத்தவோ இல்லை என்றால் சரிதான்.

2. எங்கள் கடையை சுற்றி வீடுகள் உள்ளனவா என்றால் இல்லை. எனக்கு காயம்பட்டவுடன் வெளிநபர்கள் யாரும் எனது உதவிக்கு வரவில்லை என்றால் சரிதான். நான் காயம் பட்டவுடன் மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில்சென்றேன் என்றால் போக்கு ஆட்டோவில் சென்றேன். காயம் பட்டவுடன் எவ்வளவு நேரத்தில் ஆட்டோவில் சென்றேன் என்றால் சுமார் 10 நிமிடத்தில் சென்றுவிட்டேன்.

10 நிமிட இடைவெளியில் வேறு தனிநபர்கள் யாரும் வரவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றபின் எனது கடையில்என்ன நடந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது புகார் மனுவில் தேதி குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞுபாகமில்லை. புகார் மனுவில் நான் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் சம்பவம் நடந்து மறு நாள் கையொப்பம் செய்தேன்.

3. எந்த நேரம் என்று ஞுபாகமில்லை. எனக்கு காயம்பட்டவுடன் கடைக்கு வெளியில் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியுமாஎன்றால் வண்டியை எடுத்துக்கொண்டு போன விபரம் எனக்கு தெரியும். 2 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்ததொடர்பும் இல்லை என்றால்சரியல்ல. 2 வது எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் வாள் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.த.பொ.சா.2 வாளுக்கும் 2 வது எதிரிக்கும் எந்ததொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. புகார் மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் போலிசார் எழுதிக்கொடுத்ததன் பேரில் படித்து பார்க்காமல் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி சம்பத்தன்று கடைக்கு வரவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.24 14:05:55 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை..**